# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 2009 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பிபிலோமேனியா கல்வி நூல்களுக்கான தேசிய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

*(2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

2009, யூன் மாதம் 26 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2009 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பிபிலோமேனியா கல்வி நூல்களுக்கான தேசிய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ.கூட். 10/2005

**பிபிலோமேனியா கல்வி நூல்களுக்கான தேசிய மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

தேசத்திற்கு பிபிலோமேனியா கல்வி நூல்களுக்கான தேசிய மன்றம் என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழக மொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க, சொல்லப்பட்ட கழகத்தோடு தொடர்புடைய எல்லாக் கருமங்களுக்காகவும் பயனுறு நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கத்திற்காக கொழும்பில் உருவாக்கப்பட்டுள்ளதாதலாலும்: முன்னுரை.

சொல்லப்பட்ட கழகமானது, எந்தப் பல்வேறு குறிக்கோள் களையும் விடயங்களையும், நிறைவேற்றுவதற்காகத் தாபிக்கப்பட் டுள்ளதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களை யும் வெற்றிகரமாக மேற்கொண்டும் நிறைவேற்றியும் உள்ளதுடன் அதனைக் கூட்டிணைக்க விண்ணப்பித்துள்ளதாலும், அத்தகைய விண்ணப்பத்தினை அனுமதித்தல் பொதுமக்களுக்கு நன்மைக் கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பிபிலோமேனியா கல்வி நூல்களுக்கான தேசிய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பிபிலோமேனியா கல்வி நூல்களுக்கான தேசிய மன்றத்தின் உறுப்பினர்களாக தற்போதுள்ளவர்களும் இத்தால் அமைக்கப் படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் "பிபிலோமேனியா கல்வி நூல்களுக்கான

பிபிலோமேனியா கல்வி நூல்களுக்கான தேசிய மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

தேசிய மன்றம்" என்னும் பெயரின்கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தலும் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3.** இக்கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றன :

(அ) அவசரமாகத் தேவைப்படும் முக்கியமான கல்விசார் நூல்களை சிங்களத்திலும் தமிழிலும் வெளியிடுத லையும் அச்சிடுதலையும் மொழிபெயர்த்தலையும் நாடு முழுவதும் விநியோகித்தலையும் பொறுப்பேற்றலும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த நூல்களை இறக்குமதி செய்தலும் ;

(ஆ) கல்வி நிறுவனங்களிலுள்ள நூலக வசதிகளைத் தரமுயர்த்துதலும் மேம்படுத்துதலும் ;

(இ) நாடு முழுவதும் நூலகங்களையும் நடமாடும் நூலகங் களையும் "தேசத்திற்கான நூல்கள்" என்னும் நடமாடும் விற்பனை முனைகளையும் தாபித்தலும் பேணுதலும் ;

(ஈ) வறிய சூழ்நிலைகளிலுள்ள சிறுவர்களும் இளைஞர் களும் வளர்ந்தோரும் உயர்கல்வியில் ஈடுபடுவதற்குத் தேவையான நூல்களையும் வேறு வெளியீடுகளையும் அவர்கள் பெறுவதனை இயலச் செய்தலும் நூல்கள் கட்டுப்படியாகும் விலைகளில் அவர்களுக்குக் கிடைக்கச் செய்தலும் ;

(உ) நூல் வெளியீடு, நூல்களை சிங்கள, தமிழ் மொழிகளில் மொழி பெயர்த்தல், நூல்களை இலங்கையில் விநியோகித்தல் ஆகிய துறைகளில் தொழிற் பயிற்சி யையும் கல்விசார் பயிற்சி நெறிகளையும் நடத்துதலும்

இணையத்தில் உலகளாவிய வலைப் பக்கங்களைப் பயன்படுத்துவதற்கு அத்தகைய நோக்கத்திற்காக நாடளாவிய நிலையங்களைத் திறப்பதன்மூலம் வாய்ப்பொன்றை வழங்குதலும் ;

(ஊ) வறியவர்களுக்கும் அநாதரவானவர்களுக்கும் கல்விச் சாதனங்களையும் நூல்களையும் அத்துடன் சஞ்சிகைகளையும் வழங்குதல் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதில் ஈடுபட்டிருக்கும் தொண்டர்களுக்கும் ஏனையோருக்கும் புலமைப் பரிசில்கள் வழங்குவதன்மூலம் அல்லது வேறு வகையில் நிதியுதவி செய்தல் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடைய வேறு கழகங்களுடன், சங்கங்களுடன் அல்லது ஒழுங்கமைப்புகளுடன் கூட்டாகப் பணியாற்றுதல் ; அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஊக்குவிப்பதற்கும் முன்னெடுத்துச் செல்வதற்கும் விரும்பத்தக்கதென அது கருதுக்கூடிய நூல்களையும், வெளியீடுகளையும், துண்டுப் பிரசுரங்களையும், செய்தித் தாள்களையும் சஞ்சிகைகளையும் அச்சடித்தலும் வெளியிடுதலும் விநியோகித்தலும்.

*கல்விசார் பொருட்களை அச்சிடுவதற்கும் விநியோகிப்பதற்குமான முன்னங்கீகாரம்.*

**4.** மூன்றாம் பிரிவின்கீழ் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதில், இலத்திரனியல் ஊடகத்தினூடாக வெளியிடப்பட்ட அல்லது அறிமுகப்படுத்தப்பட்ட ஏதேனும் வெளியீடு அல்லது வேறு அச்சிடப்பட்ட கல்விசார் விடயம், தீவுபூராகவும் விநியோகிக்கப்படுவதற்கு நாடப்படுமிடத்து அல்லது மாணவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக்கப்படுமிடத்து, கூட்டுத்தாபனம், கல்வி அமைச்சின்கீழ் தாபிக்கப்பட்ட கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் நிர்வாகமும் முகாமைத்துவமும் இச்சட்டத்தினதும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப் படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளினது ஏற்பாடுகளுக் கமைய தலைவரையும் செயலாளரையும் அத்தகைய விதிகளில் ஏற்பாடுசெய்யப்படக்கூடியவாறும் அதற்கிணங்கத் தெரிவு செய்யப்பட்டவர்களுமான வேறு இரண்டு பதவிதாங்குநர்களை யும் அத்தகைய வேறு ஆட்களையும் கொண்ட நிறைவேற்றுக்குழு வுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(2) எவரேனும் பதவிதாங்குநர் பதவி விலகல், பதவியிலிருந்து விலக்கப்படுதல் அல்லது இறப்பு ஆகியவற்றின் காரணமாக குழுவில் வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில் அத்தகைய வெற்றிடம் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய நிரப்பப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது குழு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று பதவிவகிக்கும் மன்றத்தின் குழு உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**6**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின தும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்க ளையுடையதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு பணத்தைக் கடனெடுப்பதற்கும் அல்லது திரட்டுவதற்கும் ;

(ஆ) மாற்றுண்டியல்களையும் காசோலைகளையும் வாக்குறுதிப் பத்திரங்களையும் ஆக்குவதற்கு, வரை வதற்கு, ஏற்றுக்கொள்வதற்கு, தள்ளுபடி வழங்குவதற்கு, புறக்குறிப்பு செய்வதற்கு, கொடுத்துத் தீர்ப்பதற்கு, கொள்வனவு செய்வதற்கு, விற்பனை செய்வதற்கு, வழங்குவதற்கு ;

(இ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை குழு உகந்த தெனக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தல் ;

(ஈ) எல்லாவிதமான ஒப்பப்பணங்களையும் மானியங்களையும் நன்கொடைகளையும் அன்பளிப்புகளையும் பரிந்து கேட்டலும் பெறுதலும் ;

(உ) எவரேனும் ஆளுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளுதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் முகவர்களையும் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமனம் செய்தல், பதவிநீக்கம் செய்தல் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துதல் அத்துடன் அவர்களுக்கு கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும் படிகளையும் பணிக்கொடைகளையும் வழங்குதல் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு உபகுழுக்களை நியமித்தல் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான அல்லது உசிதமான அத்தகைய வேறு எல்லா விடயங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7**. (1) காலத்துக்குக்காலம் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டிற்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் விடயங்களுக்காக இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இல்லாத விதிகளை ஆக்குவது கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :

(அ) உறுப்பினர்களைச் சேர்த்தல் அவர்களை வகுப்பாக்கம் செய்தல் அல்லது வெளியேற்றுதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தெரிவுசெய்தல், பதவி துறத்தல், பதவியை வறிதாக்குதல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பதவி தாங்குநர்களினதும் முகவர்களினதும், அலுவலர்களினதும், சேவையாளர்களினதும் தத்துவங்கள் கடமைகள், பணிகள் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தினதும் ஏதேனும் உட்குழுவினதும் கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைகளும் கூட்டத்தைக் கூட்டுதல், அத்தகைய கூட்டங்களின் நேரங்கள், இடங்கள், அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரல், அதற்கான கூட்ட நடப்பெண், அதில் அலுவல்களை நிறைவேற்றுதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் அத்துடன் முகாமை செய்தலும் அத்துடன் அதன் நிதியைக் கட்டுக்காவலில் வைத்திருத்தல் ;

(ஊ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல் அத்துடன் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுதல்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதி ஒன்று ஆக்கப்படுவதுபோன்ற அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

**8**. கூட்டுத்தாபனம் ஏதேனும் கொள்வனவின், அளிப்பின் கொடையின், இறுதி விருப்பாவணக் கையளிப்பின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாக்கப்படக் கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்வதற்கும், வைத்திருக்கவும் சட்டத்தில் இயலுமானதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் 7 ஆம் பிரிவிற்கமைவாக அவற்றை ஈடுவைக்க, விற்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க, உள்ள முழுத்தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

**9**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான மன்றத்தின் எல்லாக் கடன்களும் பொறுப்புக் களும் இத்தால் உருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவு தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*மன்றத்தால் செலுத்தப்படற்பாலனவும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.*

**10**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்திற்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அளிப்பு, இறுதி விருப்பாவணக் கையளிப்பு, கைமாற்றம், நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையாக இதுகாலவரை அல்லது இதன்பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் குழு தீர்மானிக்கக் கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் வைப்பிலிடுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**11**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் வேறு எல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலும் தகுந்த கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும். இவர், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இணை உறுப்பினரொருவராகவும் அத்துடன் அந்நோக்கத்திற்காக கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

கலைப்பின் மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் திருப்திசெய்ததன் பின்னர் எத்தன்மையானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனங்கள் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டவையும் அத்துடன் எந்தக் கழகம் அல்லது கழகங்கள் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் அல்லது அவற்றின் விதிகளினால் தடை செய்யப்பட்டுள்ளதோ அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறேதேனும் கழகமாக அல்லது கழகங்களாக இருப்பதும் அல்லது இருப்பனவையுமான வேறேதேனும் கழகத்திற்கு அல்லது கழகங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அந்தக் கழகம் அல்லது கழகங்கள் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால், கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் போது அல்லது கலைக்கப்படுவதற்கு உடன் முன்னராகத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் வருமானத்தினையும் ஆதனத்தினையும் பயன்படுத்துதல்.

**13.** எவ்வகையிலேனும் பெறப்பட்டதான கூட்டுத்தாபனத்தின் வருமானமும் இடமும் ஆதனமும் இதன்கண் எடுத்துக்கூறப்பட்ட குறிக்கோள்களை மேம்படுத்துமுகமாக மட்டுமே பயன்படுத்தப்படவேண்டுமென்பதுடன், அதன் பாகமெதுவும் பங்கிலாபம் அல்லது இலாபங்கள் என்ற வகையாகவோ அல்லது வேறு எவ்வகையிலுமோ கூட்டுத்தாபன உறுப்பினர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தப்படுதலும் அல்லது கைமாற்றப்படுதலுமாகாது.

கூட்டுத்தாபன உறுப்பினர்களின் பொறுப்புக்களின் வரையறை.

**14.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் கூட்டுத்தாபனத்தின் தனிசுகளை அல்லது பொறுப்புக்களைத் தீர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்காக, அத்தகைய தனிசையோ அல்லது பொறுப்புக்களையோ தீர்க்கும் வகையில் கூட்டுத்தாபனத்திற்கு அவரிடமிருந்து கொடுக்குமதியாகக் கூடியவாறான அத்தகைய ஆண்டு ஒப்பப்பணத்தின் தொகையிலும் கூடுதலாக ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதல் ஆகாது.

**15.** (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையொன்று செயலாளரின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றவும் படலாம்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

(2) கூட்டுத்தாபனத்தின் இலச்சினை தலைவரினதும் செயலாளரினதும் முன்னிலையிலன்றி எத்தன்மையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கு அத்தாட்சியாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டும். அத்தகைய ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதினின்று தனிவேறானதாதல் வேண்டும்.

**16.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், இலங்கைக் குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் குழுவினது அல்லது கூட்டுத்தாபனத்தின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ பாதித்தலோ ஆகாது.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**17.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*